[23rd March 1960

SRI A. VEDARATHNAM : இந்த உற்பத்திச் சாலையை சென்னைக்கு அருகாமையில் எந்த இடத்தில் ஏற்படுத்துவது என்று முடிவு செய்யப் பட்டிருக்கிறது.

THE HON. SRI R. VENKATARAMAN : ரஷ்யா நாட்டுநிபுணர்கள் இங்கு வந்து கிண்டிக்கு அருகாமையில் இருக்கும் இடத்தைத் தேர்ந்தெடுத் தார்கள். அதை நாம் நில ஆர்ஜிதச் சட்டப்படி வாங்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்.

SRI A. VEDARATHNAM : ரஷ்யர்கள் இதற்காக என்ன உதவி நமக்கு அளிக்கிறார்கள் ? நிதி உதவி எவ்வளவு ? மற்றப்படி நிபுணர்கள் உதவி ஏதேனும் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்திய நாட்டிற்குக் கொடுக் கப்பட்டிருக்கும் மொத்த உதவியில் இது ஒரு பகுதி. இதற்கென்று தனியாக நிதி உதவி கிடையாது. மத்திய சர்க்காரில் இந்தப் புள்ளி விவரங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நம்மிடம் இல்லை.

SRI M. KALYANASUNDARAM : இதில் நம்முடைய அரசாங்கத்திற்குப் பங்கு உண்டா ? அப்படியானால் பங்குத் தொகை எவ்வளவு ?

THE HON SRI R. VENKATARAMAN : இது மத்திய சர்க்கார் அமைக் கின்ற தொழிற்சாலை.

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், இந்தத் தொழிற்சாலை சென்னைக்கு அருகிலேயே இருக்க வேண்டிய காரணங்கள் பிரத்தியேகமாக ஏதேனும் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அதை சோவியத் யூனியன் நிபுணர்களிடந்தான் கேட்கவேண்டும்.

SRI M. K. SOMASUNDARAM : இந்தத் தொழிற்சாலைக்கு மொத்தம் எவ்வளவு ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

THE HON. SRI R. VENKATARAMAN : அதுதான் இப்போது சொன்னேன். தனியாக இதற்கென்று ஒதுக்குவதில்லை. சோவியத் யூனியனில் இருந்து மொத்தமாக எவ்வளவு உதவி கொடுக்கிறார்கள் என்று கணக்குப் போட்டு அதைப் பல துறைகளில் பல தொழிற்சாலைகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

*Playing of film records during school functions*

* 535 *Q.*—SRI A. A. SAHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have banned the playing of records of film songs in the school functions?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

*English medium schools*

* 536—Q. SRI M. P. SARATHI : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் ஆங்கிலம் போதனை மொழியாக **(English medium schools)** உள்ள பள்ளிகள் எத்தனை ?

(ஆ) அரசாங்கம் நடத்தும் பள்ளிகள் எத்தனை ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) 10

(*b*) None, Sir.

A similar question was answered yesterday.

23rd March 1960]

**Sri A. GOVINDASAMY** : இந்த ஆங்கில "மீடியம்" வைத்து நடத்தப்படுகிற பள்ளிக்கூடங்களுக்குச் சர்க்கார் ஏதாவது விசேஷ சலுகை கொடுக்கிறதா ? குறிப்பாக "கன்னியஸ்திரி"-கள் நடத்துகிற பள்ளிக்கூடங்களுக்குச் சலுகை கொடுக்கப்படுகிறதா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இதில் ஆங்கிலம் மூலமாகப் போதிக்கப்படும் பள்ளிக்கூடங்கள் இரண்டு வகைப் பள்ளிக்கூடங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று, நம் பாடத்தை அனுசரித்து சொல்லிக் கொடுப்பது. இன்னொன்று "ஆங்லோ இந்தியன் ஸ்கூல்" என்று சொல்லப்படுவது. அவர்கள் மெட்ரிகுலேஷனுக்குப் பயிற்சி கொடுக்கிறார்கள். நான் சொன்னது சாதாரணமாக நம்முடைய பாட முறையை அனுசரிக்கக் கூடியது. அவர்களுக்கு மற்றவர்களுக்குக் கொடுக்கக் கூடிய சலுகைதான் கொடுக்கப்படுகிறது.

Mr. SPEAKER : Questions are over.

**Sri A. VEDARATHNAM** : "ஆன் எ பாய்ன்ட் ஆப் ஆர்டர் ஸார்" இந்தக் கேள்விகளில் சிலவற்றுக்கு மேஜையின்மேல் பதில்கள் அச்சடிக்கப்பட்டு வைக்கப்படுகின்றன. அதில் பல பக்கங்கள் இருக்கும் காரணத்தால் இங்கு எட்டரை மணிக்கு வந்த பிறகு அதைப் படித்து உப கேள்விகள் கேட்கக் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே கேள்விகளை அங்கத்தினர்களுக்கு அனுப்பும்போதே, இந்த மாதிரி அச்சடிக்கப்பட்ட பதில்களையும் அனுப்பி வைத்தால் அங்கத்தினர்கள் படித்துப் பார்த்து உப கேள்விகள் கேட்க வசதியாக இருக்கும். இதைத் தலைவர் அவர்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER** : இந்தச் சபையில் கேள்வியைக் கேட்ட பிறகுதான் மந்திரி அதற்குப் பதில் அளிக்க முடியும். கேள்வி கேட்பதற்கு முன்பே அந்தப் பதிலை வீட்டுக்கு அனுப்பி வைப்பது விதிகளுக்கு விரோதம் என்றுதான் சொல்ல முடியும்.

**Note**:—Anashrisk (*) at the Commencement of a speach indicates revision by the Member.

## II.—PRESENTATION OF THE REPORT OF THE COMMITTEE OF ESTIMATES

**Sri R. KRISHNASAMI NAIDU** : கனம் சபாநாயகர் அவர்களே, 1959–60-ம் வருஷத்திய மதிப்பீட்டுக் குழுவின் கிராமாந்திர குடி தண்ணீர்த் திட்டங்கள் பற்றி முதல் அறிக்கையை நான் இந்த சபை முன் சமர்ப்பிக்கிறேன்.

## III.—PRIVILEGE MOTION: RESOLUTION OF THE MADRAS CITY CORPORATION Council *RE*. CERTAIN REMARKS MADE IN THE ASSEMBLY.

Mr. SPEAKER : Hon. Members would remember that I promised to give my ruling on the privilege motion raised by the hon. Member Mr. Basheed to-day. I did not want to base my ruling on what appeared in the papers and, therefore, wrote to the Worshipful Mayor of Madras, asking him if it would be possible to send me a copy of the proceedings of the City Council so that I could base my remarks on the official version of the proceedings. I have not yet received it. I wrote on Saturday and probably my letter reached the Mayor a little late. I propose to wait for two or three days to get the official version of the proceedings of the City Council relating to this matter. Of course, if I do not get it, I will give my ruling on the basis of what is reported in the Press. Therefore, I am not giving my ruling to-day.